பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 14 | சனிக்கிழமை | 27.04.2024 | அதிர்வு 270

போரில் ஏற்பட்ட மரணங்களை விட

## வீதி விபத்துக்களால் அதிக உயிரிழப்புக்கள்

நாட்டில் அண்மைக் காலமாக வீதி விபத்துக்களால் ஏற்படுகின்ற உயிரிழப்புக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தினந்தோறும் விபத்துகள் பற்றிய செய்திகளை மக்கள் அறிந்தாலும் 06

# மொட்டுவின் ஜனாதிபதி வேட்பாளராக ரணில் களமிறங்கினால் பேராதரவு வழங்க நாம் தயார்

## அக்கட்சி எம்.பிக்கள் தெரிவிப்பு



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்கினால் அவருக்கு முழுமையான ஆதரவு வழங்குவோம் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போதே அவர்கள் இதனைக் குறிப்பிட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் தினேஷ் குணவர்தன 07

# கல்வி உட்பட சகல உரிமைகளையும் பறிக்கின்றது ரணில் - ராஜபக்ஷ அரசு

## யாழில் ஜோசப் ஸ்ராலின் குற்றச்சாட்டு




(எஸ்.நிதர்ஷன்)

**“மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் உரிமையை - வாய்ப்பை வழங்காத ரணில் - ராஜபக்ஷ அரசு, மறுபக்கத்தில் கல்வி உட்பட அனைத்து உரிமைகளையும் பறிக்கின்ற செயற்பாடுகளைத்தான் செய்கின்றது.”**

**- இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் குற்றஞ்சாட்டினார்.** 07

# ஈரான் ஜனாதிபதியுடனான இரவு விருந்தில் சஜித் பங்கேற்காமைக்கான காரணம் என்ன?

## எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் விளக்கம்



ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசிக்காக நடைபெற்ற இராப்போசன விருந்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பங்கேற்காமை குறித்து தவறான தகவல்களைப் பரப்பும் அரச சார்பு ஊடகங்களின் அரசியல் முயற்சியை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் விடுத்துள்ள ஊடகஅறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது. 06




‘பிள்ளையார் கல்யாணம் போல’ நாளை, நாளை என்று கடந்த நான்கு மாதங்களுக்கு மேல் தள்ளிப்போன நாகைப்பட்டிணம் – காங்கேசன்துறை கப்பல் சேவை கடைசியாக வரும் 13ஆம் திகதி தொடங்க இருப்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

‘லேட்டாக வந்தாலும் லேட்டஸ்டாக வந்த மாதிரி’ புதிய திட்டத்துடன் – குறைந்த கட்டணத்துடன் – இந்த சேவை அறிமுகமாவதாகத் தெரிகின்றது.

இதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ‘சிவகங்கை’ கப்பல் மே முதல் வாரத்தில் அந்தமானில் இருந்து சென்னை வருகிறது. அங்கு மறு சீரமைப்புப் பணிகளை முடித்துக் கொண்டு நாகை வரும் 06

# தமிழக மீனவப் படகோட்டிகள் மூவருக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனை இரத்து

## யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

(ந.லோகதயாளன்)

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய சமயம் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் படகோட்டிகள் மூவருக்கு வழங்கப்பட்ட சிறைத் தண்டனையை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தினால் நேற்று தள்ளுபடி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் கடற்பரப்பிற்குள் பெப்ரவரி மாதம் 12 ஆம் மற்றும் 22 ஆம் திகதிகளில் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்களில் படகோட்டிகள் என்ற அடிப்படையில் மூவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றினால் 6 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அந்தச் மீனவர்கள் சட்டத்தரணி அ.நிரோசன் ஊடாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மேன்முறையீடு செய்த னர்.

மேன்முறையீடு செய்யப்பட்ட வழக்கு நேற்றைய தினம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி டி.எவ்.சூசைதாசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மூன்றுபேரின் சிறைத் தண்டனையும் புறத்தொதுக்கப்பட்டதோடு மூவரையும் எதிர்வரும் 30 ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர் செய்து விடுவிக்குமாறும் நீதிபதியினால் உத்தரவிடப்பட்டது.

# கொழும்பில் 14 மணிநேரம் நீர்வெட்டு!

கொழும்பின் பல பகுதிகளில் 14 மணித்தியால நீர் விநியோகத் தடை அமுல்படுத்தப்படவுள்ளது என்று நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இன்று மாலை 5 மணி முதல் நாளை காலை 7 மணி வரை நீர் விநியோகத் தடை அமுல்படுத்தப்படவுள்ளது.

கொழும்பு 5, 6, தெஹிவளை - கல்கிஸை மற்றும் மொரட்டுவை மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளிலும், ஜயந்திபுர, பெலவத்த பிரதேசங்களிலும் நீர் விநியோகம் தடைப்படவுள்ளது.

அம்பத்தலே நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திருத்தப் பணிகள் காரணமாக நீர் விநியோகம் துண்டிக்கப்படவுள்ளது என்று நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.



# போதை ஊசி செலுத்தி யுவதி மீது வன்புணர்வு; சூத்திரதாரியான சகோதரன் கைதாகி மறியலில்



தனது சகோதரியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்ததுடன், சகோதரியை வலுக்கட்டாயமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி வந்த குற்றச்சாட்டில் சகோதரன் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நகர் பகுதியை அண்டிய கிராமத்தை சேர்ந்த 34 வயதுடைய பெண்ணொருவர் தனது பெற்றோர் உயிரிழந்த நிலையில், சகோதரியுடன் வடமராட்சி கிழக்கு பகுதியில் உள்ள ஆதரவற்றோர் இல்லத்தில் வசித்து வந்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் பெண்ணின் சகோதரி உயிரிழந்துள்ளார். அதனை அடுத்து இல்லத்தில் வசித்து வந்த சகோதரியை, யாழ்.நகர் பகுதியை அண்டிய பிரதேசத்தில் வாழும் சகோதரன் தன்னுடன் அழைத்து வந்து தங்க வைத்துள்ளார்.

இந்நிலையில் கடந்த ஜனவரி மாதம் அந்தப் பெண்ணுக்கு போதைப்பொருள்களை வலுக்கட்டாயமாக நுகர வைத்தும் , போதை ஊசிகளை செலுத்தியும் பாலியல் வன்புணர்வுக்கு கும்பல் ஒன்று உட்படுத்தி வந்துடன் பெண்ணை சித்திரவதைக்கு உள்ளாக்கியும் வந்துள்ளது.

பின்னர் கடந்த வாரம் மீண்டும் ஆதரவற்றோர் இல்லத்தில் பெண்ணை கொண்டு சென்று சகோதரன் சேர்த்துள்ளார்.

இந்நிலையில், பெண்ணின் நடவடிக்கையில் மாற்றங்கள் தென்பட்டமையுடன், உடலில் காயங்கள் காணப்பட்டமையால், இல்ல நிர்வாகத்தினரால், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அவர் சேர்க்கப்பட்டார்.

வைத்திய சிகிச்சையின் போதே பெண் தனக்கு நேர்ந்த கொடுமைகளை விவரித்துள்ளார்.

இதனை அடுத்து சட்ட வைத்திய அதிகாரியினால், முன்னெடுக்கப்பட்ட மருத்துவ பரிசோதனைகளின் போது, பெண் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையும், பெண்ணை அடித்து துன்புறுத்தி சித்திரவதைக்கு உள்ளாக்கியமைக்கான காயங்கள் உடலில் காணப்பட்டுள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டது.

சம்பவம் தொடர்பில் ஆரம்ப விசாரணைகளை முன்னெடுத்த பருத்தித்துறை பொலிஸார், குற்றம் நடைபெற்ற பிரதேசம் யாழ்ப்பாண தலைமை பொலிஸ் நிலைய பிரிவுக்கு உட்பட்டது என்றதன் அடிப்படையில், யாழ்ப்பாண பொலிஸாருக்கு தகவல் அளித்தனர். அதனை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில், பெண்ணின் சகோதரனே, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்தமையும், போதைப்பொருள்களை கட்டாயப்படுத்தி நுகர வைத்துப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியமையும் தெரிய வந்துள்ளது.

அதனை அடுத்து சகோதரனை கைது செய்த பொலிஸார் விசாரணைகளின் பின்னர் யாழ். நீதிவான் நீதிமன்றில் நேற்றைய தினம் வியாழக்கிழமை முற்படுத்தியவேளை, சகோதரனை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.




# 2023 இல் பொருளாதாரம் மீண்டெழ ஆரம்பித்துள்ளது

## மத்திய வங்கி அறிக்கை

கடந்த வருடம் நாட்டின் பொருளாதார சுருக்கம் 2.3 வீதமாகக் காணப்படுவதாக 2023 ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வரலாற்றில் பதிவான மிக மோசமான பொருளாதார வீழ்ச்சிக்கு பின்னர், 2023 இன் பிற்பகுதியில் பொருளாதாரம் மீண்டெழ ஆரம்பித்துள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு, நாட்டில் 7.3 வீதமாக பொருளாதார சுருக்கம் காணப்பட்டதுடன், பொருளாதாரம் மிகவும் நிலையற்றதாகவும் இருந்தது.

இந்த நிலையில், 2023 ஆம் ஆண்டின் மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டுகளில், பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சியை காட்டியதாக மத்திய வங்கி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் 69.8 வீதமாகக் காணப்பட்ட அதிகூடிய பணவீக்கமானது, 2023 ஆம் ஆண்டில் 5 வீதமாகக் குறைக்கப்பட்டதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், 2023 ஆம் ஆண்டு அதிகரித்திருந்த வட்டி வீதங்கள், தற்போது வழமைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கியின் 2023 ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருமானம், வெளிநாட்டு ஊழியர்கள் ஊடான வருமானம் மற்றும் சுற்றுலா வருமானங்கள் அதிகரிப்பை காட்டியுள்ளன என மத்திய வங்கி கூறுகிறது.

2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 1.9 பில்லியன் டொலராக இருந்த நாட்டின் மொத்த கையிருப்பு, ஆண்டின் இறுதியில் 4.4 பில்லியனாக அதிகரித்ததாகவும் மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 363.11 சதமாக இருந்த அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி, கடந்த வருட இறுதியில் 323.92 சதமாக குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2022 ஆம் ஆண்டு 8. 4 வீதமாக இருந்த அரச வருமானம் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 11.1 வீதமாக அதிகரித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 114.2 வீதமாக இருந்த அரச கடன், 2023 ஆம் ஆண்டு 103.9 வீதமாக குறைவடைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட விரிவான கடன் திட்டத்தில் இணக்கம் காணப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் ஊடாக, பொருளாதார மீட்சிக்கான செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக மத்திய வங்கி அதன் ஆண்டறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை மத்திய வங்கி அதன் பொருளாதார அறிக்கையை நிதி மற்றும் பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று கையளித்தது.

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கி அதிகாரிகள் குழுவினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மாலேயில் இருந்து கட்டுநாயக்கவிற்கு நேரடி விமான சேவை ஆரம்பமானது

மாலைதீவில் இருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைத்திற்கான நேரடி விமான சேவையை Maldivian விமான சேவை ஆரம்பித்துள்ளது.

மாலைதீவின் மாலே சர்வதேச விமான நிலையத்தில் இருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைத்திற்கான நேரடி விமான சேவை நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

Maldivian விமான சேவைக்கு சொந்தமான முதலாவது விமானம் நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியது.

கியூ 2- 940 என்ற அந்த விமானம்



நேற்று இரவு 09.55 அளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்து.

மாலைதீவு மற்றும் இலங்கைக்கு இடையிலான இந்த நேரடி விமான சேவை பிரதி வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறைந்த கட்டண விமான சேவையாக இயங்கும் இந்த சேவையில் எம் - 320 எயார் பஸ் வகை விமானம் பொருத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வருகை தந்த விமானத்தில் மாலைதீவின் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் கபிதான் மொஹமட் நாட்டிற்கு வருகை தந்துள்ளார்.

விமானத்தில் வந்த பயணிகளை கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வரவேற்றார்.

# தெல்லிப்பழையிலும் தந்தைக்கு உணர்வுபூர்வமாக நினைவேந்தல்




தந்தை செல்வாவின் 47 ஆவது ஆண்டு நினைவேந்தல் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் தெல்லிப்பழையில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் தூபியில் உணர்வுபூர்வமாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

தென்னிந்திய திருச்சபையின் பேராயர் பத்மதயாளன், முன்னாள் பேராயர் ஜெபநேசன் தலைமையில் பிரார்த்தனை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டு தந்தை செல்வாவின் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தி ஈகை சுடரும் ஏற்றப்பட்டது.

இதன் பொழுது செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையினர், தென்னிந்திய திருச்சபையின் பேராயர் பத்மதயாளன், முன்னாள் பேராயர் ஜெபநேசன் , இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் அரசாங்க அதிபர் வேதநாயகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மட்டு. நகரில் தந்தை செல்வாவின் 47ஆவது நினைவு தின நிகழ்வுகள்



(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் தந்தை செல்வாவின் 47 ஆவது நினைவு தின நிகழ்வு மட்டு நகரில் உள்ள தந்தை செல்வாவின் நினைவுப் பூங்காவில் நேற்று வெள்ளிக் கிழமை இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணியின் தலைவர் கே.சோபனன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கி.துரைராஜசிங்கம், பா.அரியநேத்திரன், ஞா.ஸ்ரீநேசன், மட்டக்களப்பு முன்னாள் மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் தயாளகௌரி உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது தந்தை செல்வாவின் நினைவுப் பூங்காவில் உள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு முன்னாள் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கத்தின் ஏற்பாட்டில் சூரிய மின்கலம் பொருத்தப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன், ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து தந்தை செல்வா தொடர்பான நினைவு உரைகளும் நிகழ்த்தப்பட்டன.

# அரசியல் செய்வதை பேராயர் தவிர்த்துக்கொள்ள வேண்டும்

## மஹிந்தானந்த அளுத்கமகே எம்.பி. கூறுகிறார்



**“உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தை அரசியலாக்குவதை பேராயரும், கத்தோலிக்க சபையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பேராயருக்கு சஜித் பிரேமதாஸ, அநுர குமார திஸாநாயக்க ஆகியோரிடம் மாத்திரமா டீல் உள்ளது.”**

**-இவ்வாறுஆளும்தரப்பின்நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் –

“உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பல விவாதங்கள் இடம்பெற்றுள்ளன. இதற்காக மாத்திரம் 150 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் பேராயரும், கத்தோலிக்க சபையும் மக்கள் மத்தியில் மாறுப்பட்ட நிலைப்பாட்டை தோற்றுவிக்க முயற்சிக்கிறது. கத்தோலிக்கர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக அவர்கள் குரல் கொடுக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

இருப்பினும் இந்த தாக்குதல் நாட்டில் இடம்பெற்ற முதலாவது தாக்குதல் அல்ல, தலதா மாளிகை, ஸ்ரீமாவிகாரை, காத்தான்குடி பள்ளிவாசல் தாக்குதல் என மத தலங்கள் மீது அடிப்படைவாதிகளாலும், பயங்கரவாதிகளாலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தலதா மாளிகை தாக்குதல், அரந்தலாவ பிக்குகள் படுகொலை சம்பவங்களை சிங்கள பௌத்தர்கள் இழுத்துக் கொண்டு செல்லவில்லை. உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தாரிகளையும், தாக்குதலை தடுக்க தவறியவர்களையும் கத்தோலிக்க சபை குற்றஞ்சாட்டுவதில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவை மாத்திரமே விமர்சிக்கிறார்கள். குற்றஞ்சாட்டுகிறார்கள்.

கத்தோலிக்க மக்களுக்கு இந்த நாட்டில் உள்ள கௌரவத்தை இல்லாதொழிக்க வேண்டாம் என பேராயரிடமும், கத்தோலிக்க சபையிடமும் கைக்கூப்பி வேண்டிக் கொள்கிறேன். சஜித்துக்கும், அநுரவுக்கும் வாக்களிக்குமாறு பேராயர் குறிப்பிடுகிறார். தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று இவரால் எவ்வாறு குறிப்பிட முடியும்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சிங்கள பௌத்தர்கள் வாக்களித்தார்கள். ஆனால், அஸ்கிரிய பீடம் கோட்டபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்குமாறு சிங்கள மக்களிடம் குறிப்பிடவில்லை. மத தலைவர்கள் அரசியல் மேடைகளுக்கு வருவதில்லை. சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரிடம் மாத்திரமா பேராயர் டீல் வைத்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணிக்கு வாக்களிக்குமாறு பேராயர் குறிப்பிடுகிறார். ஆனால் குண்டுத்தாக்குதல் தாரிகளின் தந்தை மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய பட்டியல் உறுப்பினர். இந்த கட்சிக்கு வாக்களிக்குமாறு குறிப்பிடும் அளவுக்கு பேராயர் ஏன் தள்ளப்பட்டுள்ளார் என்பதை அறியவில்லை. ஆகவே இவரது கருத்துக்கள் துரதிஷ்டவசமானது.

தலதா மாளிகைக்கு தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் நாங்கள் ஒருபோதும் சிங்களவர்களுக்கு மாத்திரம் வாக்களிக்குமாறு குறிப்பிடவில்லை. ஆகவே உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத்தாக்குதல்களை அரசியலுக்காக பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டாம் என்பதை கத்தோலிக்க சபையிடம் கேட்டுக் கொள்கிறேன்.”– என்றார்.

# ஆபாசப் படங்களை பதிவேற்றுகின்றவர்களை அடையாளம் காண்பதற்கு விசேட நடவடிக்கை



18 வயதிற்கு குறைந்த ஆண் மற்றும் பெண் பிள்ளைகளின் ஆபாசப் படங்கள் மற்றும் காணொளிக் காட்சிகளை சமூக ஊடகங்கள் அல்லது இணையத்தளங்களில் பதிவேற்றுபவர்களை அடையாளம் காண்பதற்காக பொலிஸார் விசேட நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் சிறார்களுடன் தொடர்புடைய படங்களை வெளியிட்ட 10 சம்பவங்கள் பதிவாகின.

இதன்படி, கூகுள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கைதானவர்கள் 20 வயதிற்கும் குறைவானவர்கள் என்றும் அவர்கள் 10 வயதிற்கும் குறைவான பாடசாலை செல்லும் மாணவிகளின் ஆபாசப் படங்கள் மற்றும் காணொளிகளை இணையத்தளங்களில் தரவேற்றியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கப்பல் மே பதினோராம் திகதி அங்கிருந்து காங்கேசனுக்கு பரீட்சார்த்த சேவையில் ஈடுபடும். அன்று காலை நாலு மணி நேர ஓட்டத்தில் காங்கேசன் வந்து சற்றுத் தரித்து, பின்னர் அது நாகை திரும்பும்.

வரும் 13ஆம் திகதி தொடக்கம் தினசரி ஒவ்வொரு நாளும் கப்பல் நாகையிலிருந்து காலை 8 மணிக்குப் புறப்பட்டு நண்பகல் காங்கேசனை வந்தடையும். பின்னர் பிற்பகல் 2 மணிக்கு காங்கேசனிலிருந்து புறப்பட்டு மாலை 6 மணிக்கு நாகையைச் சென்றடையும்.

இந்தக் கப்பல் சேவையை நடத்துவதற்கு நாகையில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் ஒவ்வொரு பயணியும் இந்தியப் பணத்தில் 2,250 ரூபா துறைமுகக் கட்டணம் செலுத்த வேண்டும் என்று தமிழகக் கடலோர அதிகார சபை பிடிவாதமாக வலியுறுத்தியது. அந்தப் பணத்தை இந்திய வெளிவிவகார அமைச்சு மாதாந்தம் மொத்தமாக – மானியமாக – தமிழக அரசுக்கு தானே வழங்க இணங்கியமையை அடுத்து, பயணிகளிடம் அந்தப் பணத்தை அறவிடும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் மாதாந்தம் 72 லட்சம் இந்திய ரூபாவை இந்திய வெளியுறவு அமைச்சு தமிழகக் கடலோர அதிகார சபைக்கு வழங்கும் என்று அறிவிக்கப்படுகின்றது.

கப்பல் கட்டணம் ஒரு பயணிக்கு ஒரு வழிப் பயணத்துக்கு 50 அமெரிக்க டொலர்கள். நாகையிலிருந்து புறப்படும் போது அந்தக் கட்டணத்துக்கு 18 வீதம் ஜி.எஸ்.டி. வரி செலுத்த வேண்டும். ஆகையால் நாகையிலிருந்து காங்கேசனுக்குப் பயணிக்க 59 டொலர் கட்டணமாக அறவிடப்படும்.

காங்கேசனில் இருந்து நாகைக்குச் செல்வதற்கு காங்கேசன்துறை துறைமுக வரி பயணிக்கு 5 டொலர் செலுத்த வேண்டும். ஆகவே காங்கேசன் – நாகை பயணத்திற்கு கட்டணம் 55 டொலர்.

ஆக இரு வழிப் பயணத்துக்கு மொத்த கட்டணம் 59 + 55 = 114 டொலர்கள். டொலரின் பெறுமதி அண்ணளவாக 300 ரூபாவாகக் கணக்கிடப்பட்டால் போய் வர கட்டணம் சுமார் 34,200 ரூபா.

கப்பலில் மொத்த இருக்கைகள் 150. ஒரு வழிப் பயண நேரம் நான்கு மணித்தியாலம். ஒவ்வொரு பயணியும் தம்முடன் மொத்தம் 60 கிலோ பொதிகளை எடுத்துச் செல்ல முடியும். தினசரி சேவை நடக்கும்.

பயணிகளின் ஒவ்வொரு பொதியும் 20 கிலோவுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்று கப்பல் சேவையை நடத்தும் INDSRI பயணிகள் கப்பல் சேவை நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் நிரஞ்சன் நந்தகோபன் சோமசுந்தரம் தெரிவித்தார்.

இந்தக் கப்பல் சேவை தொடர்பில் நமது 'பெருங்குடி' மக்களுக்கு ஒரு சந்தோஷ செய்தியும் ஒரு சோகச் செய்தியும் உண்டு.

கப்பலில் On board Duty Free Shop இருக்கும். தேவையான பெருங்குடி ரகங்களையும் தாராளமாக வாங்கலாம். – இது சந்தோஷச் செய்தி.

ஆனால், கப்பல் பயணத்தின் போது அவற்றைத் திறந்து முகர்ந்து பார்க்கவும் அனுமதி இல்லை. – இது சோகச் செய்தி.

கப்பலின் டிக்கெட் விற்பனை முகவர் நிலையம் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும்.

சென்னை, திருச்சி ஊடாக சர்வதேச பயண ஒழுங்குகளை செய்வோரின் வசதிக்காகவும், ஏனையோரின் சுலப அணுகுமுறைக்காகவும் நேரடியாக இணையத்திலும் டிக்கெட் பதிவு செய்து பெறலாம்.

கூட்டாக யாத்திரை செல்பவர்களுக்கு நாகைக்கு அப்பால் ரயில் ஒழுங்கு ஏற்பாடுகளும் செய்து தரப்படும் எனக் கூறப்படுகின்றது.

அவை பற்றிய முழு விவரங்களும் 'முரசு' இதழில் விரைவில் வெளியாகும்.

நாகையிலிருந்து வரும் 13 ஆம் திகதி வரும் முதல் கப்பலின் பயணிகளை நாட்டின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே காங்கேசனில் நேரில் வரவேற்கும் சாத்தியமும் இருப்பதாகக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன

# ஈரான் ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைக்கான விஜயத்தின்போது ஈரான் ஜனாதிபதியைச் சந்திக்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விருப்பம் கொண்டிருந்தார் என எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் ஈரான் தூதரகத்துக்கும் அறிவித்துள்ளது.

அவ்வாறு இருக்கும்போது சில ஊடகங்கள் மேற்கொள்ளும் ஊடக நடவடிக்கைகள் மூலம் ஈரான் ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவுக்கும் முகமாக இராப்போசன விருந்தில் எதிர்க்கட்சித் தலைவர் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்க முயற்சிப்பது அடிப்படையற்ற விடயமாகும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த இராப்போசன விருந்தில் எதிர்க்கட்சித் தலைவர் கலந்து கொண்டிருந்தால் "ரணில் – சஜித் அரசியல் டீலுக்குத் தயார்" என்று அவதூறு ஒன்றை உருவாக்கிப் பரப்பவும் இந்த ஊடகங்கள் தயாராக இருந்தமை தெரியவந்தமை இந்தத் தீர்மானத்துக்கு வருவதற்கான மற்றுமொரு காரணம் எனக் குறிப்பிட விரும்புகின்றோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி என்ற வகையில், ஈரான் ஜனாதிபதியும் ஈரான் மக்களும் இலங்கையுடன் தொடர்ந்தும் மேற்கொள்ளும் நட்புறவை நாம் எப்போதும் மெச்சுகின்றோம் என்றும் குறித்த ஊடக அறிக்கையில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

# வீதி விபத்துக்களால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்தச் செய்திகளை அவர்கள் அலட்சியமாக கடந்து செல்கின்றார்கள் என்பதே உண்மை.

சிறுவர் முதல் வயோதிபர் வரை அனைவரும் வீதி விபத்துக்களுக்கு உள்ளாகுவதைக் காண முடிகின்றது.

முப்பதாண்டுகாலப் போரின் போது ஏற்பட்ட உயிரிழப்புக்களை விட தற்போது வீதி விபத்துக்களால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று அண்மைய புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

அதிகரித்த வாகனங்களின் பயன்பாடு மற்றும் சாரதிகளின் கவனக் குறைவினாலேயே அதிகமான வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன என்று போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடந்த 24 மணித்தியாலங்களில் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற 8 வீதி விபத்துக்களில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த 8 விபத்துகளில் 5 விபத்துக்கள் வாகன சாரதிகளின் கவனக் குறைவினாலேயே இடம்பெற்றுள்ளன என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கடந்த 12ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துக்களால் 23 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், புத்தாண்டு தினத்தில் மாத்திரம் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் கடந்த ஜனவரி மாதத்தின் முதல் 25 நாட்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் மாத்திரம் 136 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் 1,189 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன என்றும், அவற்றில் 130 விபத்துக்களில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வீதி விபத்துகளில் மூன்றில் ஒரு பங்கு விபத்துக்கள் மோட்டார் சைக்கிள்களால் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கடந்த வருடத்தில் 22 ஆயிரத்து 804 வீதி விபத்துக்கள் பதிவாகிய நிலையில் அவற்றில் 2 ஆயிரத்து 280 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தநிலையில் வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் தங்களது வாகனங்களைச் செலுத்த வேண்டும் என்றும், வீதி விபத்துக்களைக் குறைத்துக்கொள்வதற்கு அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹப்புகொட வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், 2030ஆம் ஆண்டளவில் 50 சதவீதமாக வீதி விபத்துக்களைக் குறைக்க எதிர்பார்த்துள்ளதாகவும், இருப்பினும் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பட்டதாரி ஆசிரியர்களை இணைப்பதற்கான நேர்முகப் பரீட்சை நாளைமறுதினம் ஆரம்பம்

தேசிய பாடசாலைகளுக்குப் பட்டதாரி ஆசிரியர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளைமறு தினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்தது.

மார்ச் மாதம் 2 ஆம் திகதி இடம்பெற்ற ஆசிரியர் பரீட்சை யின் பெறுபேறுகளுக்கு அமைய, இவர்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கமைய, புதிதாக 2053 பட்டதாரிகள், ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

உயர் தர விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம், சர்வதேச மொழிகள் மற்றும் தரம் 13 இற்கான அனைத்துப் பாடங்களுக் கும் ஆசியர்கள் நியமிக்கப்பட்டவுள்ளனர்.

பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், நேர்முகப் பரீட்சைக்குத் தகுதி பெற்ற பட்டதாரிகளின் பெயர்கள் அமைச் சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## கல்வி உட்பட சகலட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைக ளில் அரசியல் தலையீடுகள் அதிகரித்துக் காணப்படுகின் றன. குறிப்பாக தேசிய பாடசாலைகளில்தான் அரசியல் தலை யீடுகள் தற்போது அதிகரித்து வருகின்றன.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள தேசிய பாட சாலையான யாழ். மத்திய கல்லூரியில் புதிதாக நியமிக் கப்பட்ட ஒரு அதிபரைக் கூட மாற்றிய ஒரு செயற்பாடு நடந்தி ருக்கின்றது.

இதேபோன்றுதான் கிழக்கு கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பிலுள்ள தேசிய பாடசாலையான பட்டிருப்பு கல்லூரியிலும் அரசியல் தலையீடுகளுடனான சம்பவம் ஒன்று நடைபெற்றிருக்கின்றது.

அங்கும் நியமிக்கப்பட்ட அதிபரை மாற்றி வேறு ஒருவரை தற்போது நியமித்திருக்கின்றனர். அங்குள்ள அரசியல்வாதி யான பிள்ளையான் கல்வி அமைச்சுடன் பேசி இந்த மாற்றத் தைக் கொண்டு வந்திருக்கின்றார்.

தமது அரசியல் நலன்களுக்காக அரசியல் தலையீடுகளைப் பாடசாலைகளில் செய்ய முயல்வது உண்மையில் ஒரு தவ றான செயற்பாடாகும். எனவே, பாடசாலைகளில் அரசியல் தலையீடுகள் மேற்கொள்வதை அரசியல்வாதிகள் நிறுத்திக் கொள்ள வேண்டும். கல்வி அமைச்சும் அதிகாரிகளும் இதற்கு இடமளிக்கக்கூடாது.

தேர்தல் வருகின்றதால் தமக்கான ஆதரவைப் பெருகிக் கொள்வதற்கே அரசியல்வாதிகள் இவ்வாறான செயற்பாடு களைத் தற்போது தீவிரமாக முன்னெடுக்கின்றனர். இதனை நிறுத்த வேண்டும் என்று கல்வி அமைச்சிடம் கூறியபோது நிறுத்துவதாக அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், இதுவரையில் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவில்லை.

இவ்வாறு நியமனங்கள் மட்டுமல்ல சில முறையான இடமாற்றங்களில் கூட அரசியல்வாதிகளின் தலையீடுகள் காணப்படுகின்றன. இத்தகைய செயற்பாடுகள் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால்தான் கல்வியில் அரசியல் தலையீடுகளை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று நாம் கோருகின்றோம்.

மேலும் இந்த வருடம் மே தினத்தை யாழ்ப்பாணத்தில் செய்யத் தீர்மானத்திருக்கின்றோம். இதில் விசேடமாக அதிபர், ஆசிரியர்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகள் மட்டுமல்ல இந்த அரசு கொண்டு வந்திருக்கின்ற அடக்குமுறைச் சட்டங்கள், பேச்சுரிமை, தொழில் உரிமை, பயங்கரவாத எதிர்ப்பு போன்ற சட்டங்கள் உட்பட பல்வேறு சட்டங்களுக்கு எதிராகவும் அனைவரதும் உரிமைகளை வலியுறுத்தி மே தின நிகழ்வைச் செய்கின்றோம்.

எனவே, மக்களுக்கு இருக்கின்ற உரிமையை மாற்றுவ தற்கு ரணில் விக்கிரமசிங்க அரசுக்கு எந்த உரிமையும் கிடையாது. ரணில் - ராஜபக்ஷ அரசு மக்களுக்கு எதிரான சட்டங்களைக் கொண்டு வந்தது மட்டுமல்லாமல் கல்வியில் கூட திருத்தங்கள் என்ற பெயரில் புதிய கொள்கைகளைக் கொண்டு வர முயன்றிருக்கின்றார்கள்.

இவ்வாறான திருத்தங்கள் அல்லது புதிய கொள்கைக ளைக் கொண்டு வந்து இந்த நாட்டில் உள்ள இலவசக் கல்வி முறையை இல்லாமல் ஆக்குகின்ற ஒரு செயற்பாட்டைத்தான் இவர்கள் செய்யப் போகின்றார்கள். இலவசக் கல்வியைக் காசுக்குக் கொடுக்கின்ற செயற்பாட்டைத்தான் அரசு முன்னெ டுக்கின்ற ஆபத்து உள்ளது.

இதேபோன்று இப்போது பாடசாலைகளை மூடுகின்ற செயற்பாடுகளை ரணில் - ராஜபக்ஷ அரசு முன்னெடுக்கின் றது. இது அந்தந்தப் பிரதேசங்களில் இருக்கின்ற மக்களின் உரிமையைப் பறிக்கின்ற ஒரு செயற்பாடாகவே இந்த அரசின் செயற்பாடுகள் அமைகின்றன.

அது மட்டுமல்லாமல் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் காசு கொடுத்துப் படிக்க வேண்டிய ஒரு செயற்பாட்டையும் இவர்கள் செய்யப் பார்க்கின்றார்கள்.

உண்மையிலே மக்கள் விரோத, மாணவர் விரோத, ஆசிரி யர் விரோத செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ரணில் விக் கிரமசிங்கவுக்கு எந்த உரிமையும் கிடையாது. ஏனென்றால் அவர் மக்கள் ஆணையில்லாத ஒரு ஜனாதிபதி. அவர் மக்க ளால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அல்லர்.

ஆனாலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 134 வாக்குகளை வைத்துத்தான் அவர் எல்லாத்தையும் செய்கின் றார். அவ்வாறு அவர் செய்கின்ற அனைத்தும் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளாகத்தான் இருக்கின்றன.

குறிப்பாக தேர்தல் வைக்கின்றேன், வைக்கின்றேன் என்று சொல்லி ஒரு தேர்தலும் இல்லை. அவ்வாறு தேர்தல் என்பது வெறுமனே பேசுபொருளாக மட்டுமே இருக்கின்றது.

மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தெரிவு செய்வ தற்கு அல்லது தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கு அந்த மக்களுக்கு இருக்கின்ற உரிமையை - வாய்ப்பை வழங்காத ரணில் - ராஜபக்ஷ அரசு மறுபக்கத்தில் கல்வி உட்பட அனைத்து உரிமைகளையும் பறிக்கின்ற செயற்பாடு களைத்தான் செய்கின்றது.” - என்றார்.

## மொட்டுவின் ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளிட்டோரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல், அரசின் எதிர்காலச் செயற் பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன என்று இராஜாங்க அமைச்சர் டீ.பி. ஹேரத் தெரிவித்தார்.

மக்களிடம் உண்மையை எடுத்துரைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது கூறினார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பொது வேட்பாளர் நகர்வு இனி மேலும் வலுப்பெறும்

ஜனாதிபதித் தேர்தலில் களம் இறங்குவதா, இல்லையா என்று முடிவெடுக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடைசியாக வேறு வழியின்றி கட்டாயம் இறங்கியாக வேண்டும் என்ற நெருக்கடியில், அதற்கான தீர்மானத்தை எடுத்து விட்டார் எனத் தெரிகின்றது.

அது பற்றிய முடிவை இன்னும் அவர் உத்தி யோகபூர்வமாக அறிவிக்காவிட்டாலும், பூர்வாங்க ஆயத்த வேலைகளில் அவர் ஈடுபடத் தொடங்கி விட்டார்.

ஜனாதிபதித் தேர்தலைக் கருத்தில்கொண்டு பரந்த அரசியல் கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளார்.

அதன் முதல் நடவடிக்கையாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ மற்றும் ஏனைய கட்சிகள் மற்றும் குழுக்களின் பிரதிநிதிகளை அவர் இவ் வார முற்பகுதியில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கூட்டத்தில் மகாஜன எக்சத் பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரதமர் தினேஷ் குணவர்தன கலந்துகொண்டார். மேலும். பல அமைச்சர்களும் பிரமுகர்களும் கலந்துகொண்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும், ஐக்கிய தேசியக் கட்சியும் தனித்தனியாக மே தினப் பேரணிகளை நடத்துவது எனவும், அதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலைக் கருத்தில்கொண்டு ஒத்த கருத்துடைய ஏனைய கட்சிகளுடன் இணைந்து பரந்த கூட்டணியை உருவாக்குவது எனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகப் புதிய அரசியல் கூட்டணி சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்று இந்தச் சந்திப்பில் ஒரு தரப்பு வலியுறுத்தியது. இதையடுத்து அனைத்து கட்சிகளும் குழுக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சின்னத்தில் புதிய கூட்டணியைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

ஆக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னை இந்த ஜனாதிபதிப் பதவிக்குக் கொண்டு வந்த ராஜபக்ஷக்களோடு, பௌத்த - சிங்களத் தீவிரப் போக்குக் கொண்ட ராஜபக்ஷக்களோடு, கன்னை கட்டி, அணி சேர முடிவு செய்து விட்டார்.

அவரின் அந்த அணியில் சேருமாறு விமல் வீரவன்ஸ, பிவித்துரு ஹெல உறுமய தலைமையிலான அரசியல் குழுக்கள் மற்றும் டலஸ் அழகப்பெரும போன்ற தரப்பினருக்கும் அழைப்பு விடுவதற்கு மேற்படி ரணில் கூட்டிய கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது.

ஆக, பெரும் தேசிய வாதத்தையும் இனவாதத்தையும் கக்குவதிலும், நடைமுறையில் அவற்றை வெளிப்படுத்துவதிலும் சற்று அமுக்கி வாசித்து வந்த ரணில் விக்கிரமசிங்கவும், கடைசியாகத் தேர்தல் வெற்றிக்காக இனவாதத் தரப்புக்களுடன் கூட்டிணைகின்றார்.

இந்தப் பின்புலத்தில் சிறுபான்மையினரின் - குறிப்பாகத் தமிழர்களின் - வாக்குகள் ரணிலுக்குக் கிட்டாது என்பது திண்ணம்.

அதேசமயம், தமிழர்களின் வாக்குகள் ரணிலின் பிரதான எதிர்த்தரப்பான சஜித்துக்கும் கிடைக்காமல் இருப்பதையும் -

தென்னிலங்கைப் பேரினவாதிகளின் வாக்குகள் ரணிலுக்கே கிட்டுவதையும் -

உறுதிப்படுத்துவதற்காக 'ஒரே கல்லில் இரு மாங்காய்கள்' என்ற அரசியல் காய் நகர்த்தல்கள் இனி தமிழர் தாயகத்திலும் கட்டவிழும். இதற்காக இரண்டு கட்ட நகர்வுகள் நடக்கும்.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற காய் நகர்த்தல் மூலம் ரணிலுக்குக் கிட்டாத தமிழ் வாக்குகளை சஜித்துக்கும் கிடைக்காமல் தடுக்கும் நகர்வு தீவிரம் பெறும்.

அதே நேரம் தமிழர்கள் தங்கள் தேசிய தாயகத்தில் தனியான பொது வேட்பாளரை நிறுத்துகின்றார்கள் என்ற கருத்துரையை சிங்களத்தில் ஊதிப் பெருப்பித்து, பேரினவாதத்தைப் பெருந் தீயாகக் கிளப்பி, தென்னிலங்கை வாக்குகளை ரணிலுக்கு விழவைப்பார்கள்.

இதற்கான பேரினவாதத் தீவிரப் போக்குத் தரப்புகள் இனி ரணில் பக்கத்தில் கூட்டிணைவதைக் காணலாம்.

தமிழர் தரப்பின் பொதுவேட்பாளர் என்ற தமிழ்த் தேசிய எழுச்சி நாடகம் தமிழர் தாயகத்தில் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரை ஆதரிக்கும் பேரினவாதிகளின் தோன்றாத் துணையுடன் கட்டவிழும் என்றும் எதிர்பார்க்கலாம்.

# மோடி இன்னும் சில நாள்களில் மேடையில் கண்ணீர் விடுவார்

## ராகுல் காந்தி கூறுகிறார்



“சமீப நாள்களில் மோடி உரை நிகழ்த்தும்போது மிகவும் பதற்றத்துடன் காணப்படுகிறார். இன்னும் சில நாள்களில் அவர் மேடையில் கண்ணீர் கூட விடுவார்,”

இவ்வாறு காங்கிரஸ் எம்.பி ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தல் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு இந்தியா முழுவதும் 12 மாநிலங்கள் மற்றும் 1 யூனியன் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றது. கர்நாடகாவில் மொத்தமுள்ள 28 தொகுதிகளில் முதல்கட்டமாக நேற்று 14 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இந்த நிலையில், கர்நாடகாவில் நடைபெற்ற பிரச்சாரப் பேரணியில் உரையாற்றிய காங்கிரஸ் எம்.பி ராகுல் காந்தி,

“சமீப நாள்களில் மோடி உரை நிகழ்த்தும்போது மிகவும் பதற்றத்துடன் காணப்படுகிறார். இன்னும் சில நாள்களில் அவர் மேடையில் கண்ணீர் கூட விடக்கூடும்.

கடந்த 10 ஆண்டுகளில் நரேந்திர மோடி ஏழைகளிடம் இருந்து பணத்தை மட்டுமே பறித்துள்ளார். நாட்டின் 70 கோடி மக்களிடம் எவ்வளவு செல்வம் இருக்கிறதோ, அதே அளவு செல்வத்தை 22 பேருக்கு வழங்கியுள்ளார். வேலையில்லா திண்டாட்டத்தையும், பணவீக்கத்தையும் நீக்கி காங்கிரஸ் கட்சி உங்களுக்கு பங்களிப்பை வழங்கும்.

கோடீஸ்வரர்களுக்கு நரேந்திர மோடி எவ்வளவு பணம் கொடுத்தாரோ, அவ்வளவு பணத்தை நாங்கள் இந்தியாவில் உள்ள ஏழை மக்களுக்கு கொடுப்போம். கர்நாடகாவில் காங்கிரஸ் அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றியுள்ளோம். இதன்மூலம் இங்குள்ள மக்கள் ஏராளமான நன்மைகளைப் பெறுகிறார்கள். நரேந்திர மோடி அரசு சிலரை மட்டும் கோடீஸ்வரர்களாக்கும்.” – என்றார்.

# இஸ்லாமியர்களுக்கான இடஒதுக்கீடு நீக்கப்படும்

## அமித் ஷா சர்ச்சைக் கருத்து

தெலுங்கானாவில் காங்கிரஸ் மற்றும் பி.ஆர்.எஸ். கட்சிகள் வழங்கிய இஸ்லாமியருக்கான இடஒதுக்கீடு நீக்கப்படும் என மத்திய உட்துறைஅமைச்சரும், பா.ஜனதாவின் மூத்த தலைவருமான அமித் ஷாஅமித் ஷா தெரிவித்துள்ளார்.

தெலுங்கானாவின் மேடக் நாடாளுமன்ற தொகுதியில் அண்மையில் இடம்பெற்ற தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமித் ஷா இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், “தெலுங்கானாவில் டி.ஆர்.எஸ். மற்றும் காங்கிரஸ் கட்சியின் ஊழல் அளவு கடந்துள்ளது. இரு கட்சிகளும் கைகோர்த்து மக்களை ஏமாற்றி வருகின்றன.

மூன்றாவது முறையாகவும் மோடியை தேர்ந்தெடுத்தால் தெலுங்கானாவை ஊழலில் இருந்து மோடி விடுவிப்பார். தெலுங்கானாவில் காங்கிரஸ் மற்றும் பி.ஆர்.எஸ். கட்சிகள் வழங்கிய இஸ்லாமியருக்கான இடஒதுக்கீடு முடிவுக்கு கொண்டு வரப்படும்.”– என்றார்.



# விசாரணைக்கு ஒத்துழைக்க மறுப்பு; செந்தில் பாலாஜி மீது குற்றச்சாட்டு



சட்ட விரோத பணப்பரிமாற்ற தடை சட்ட வழக்கு, தொடர்பான விசாரணைக்கு செந்தில் பாலாஜி ஒத்துழைக்க மறுக்கிறார் என அமுலாக்கத்துறை குற்றம் சாட்டியுள்ளது.

அமலாக்கத்துறையின் வழக்கு விசாரணையை தள்ளி வைக்கக் கோரி செந்தில்பாலாஜி சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அமுலாக்கத்துறையினரால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது அமலாக்கத்துறை தரப்பில்,

“சட்ட விரோத பணப்பரிமாற்ற தடை சட்ட வழக்கு தொடர்பாக, விசாரணைக்கு செந்தில் பாலாஜி ஒத்துழைக்க மறுக்கிறார். வழக்கை 3 மாதங்களில் முடிக்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டும் செந்தில் பாலாஜி விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை. போதிய காரணங்கள் ஏதுமில்லாமல் தாக்கல் செய்யப்பட்ட செந்தில் பாலாஜியின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்” என வாதிடப்பட்டது.

இதையடுத்து, அமுலாக்கத்துறை பதில் மனு தாக்கல் செய்த நிலையில், விசாரணையை ஜூன் 21 ஆம் திகதிக்கு உயர்நீதிமன்றம் ஒத்திவைத்தது.

செந்தில்பாலாஜியின் நீதிமன்ற காவல் நிறைவடைந்த நிலையில், 35 ஆவது முறையாக செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை ஏப்ரல் 30 ஆம் திகதி வரை நீட்டித்து சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நைஜீரியா சிறையிலிருந்து 100 கைதிகள் தப்பியோட்டம்!









நைஜீரியாவில் கனமழையால் சேதமடைந்த சிறைச்சாலையிலிருந்து 100 இற்கும் மேற்பட்ட கைதிகள் தப்பிச்சென்றுள்ளனர் என சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நைஜர் மாநிலத்தின் சுலேஜா என்ற இடத்தில் உள்ள சிறைச்சாலையில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் பெய்த கனமழையால் சிறைச்சாலை சுற்றுச்சுவரில் அமைக்கப்பட்டிருந்த வேலி உள்ளிட்டவை சேதம் அடைந்துள்ளன.

இதனை பயன்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டிருந்த கைதிகள் சிறையை உடைத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, தப்பிச் சென்ற கைதிகளை தேடும் பணியில் சிறைச்சாலை அதிகாரிகளும் பொலிஸாரும் ஈடுபட்டு வருகின்றனர் என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# தன்சானியாவில் சீரற்ற காலநிலை 155 பேர் உயிரிழப்பு; 236 பேர் காயம்









கிழக்கு ஆபிரிக்க நாடான தன்சானியாவில் சீரற்ற கால நிலையினால் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக சுமார் 155 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 236 பேர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்தும் அங்கு பெய்து வரும் மழை காரணமாக 51 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண உதவிகளை துரிதப்படுத்துமாறு தன்சானிய பிரதமர், அந்த நாட்டு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

# குழந்தை கழுத்தில் கத்தி வைத்து கொள்ளையிட்ட மூவர் சிக்கினர்!

## வவுனியாப் பொலிஸார் நடவடிக்கை








**கே.வசந்தன்**

வவுனியா கடவுச் சீட்டு அலுவலகத்திற்கு சென்ற பெண்ணிடம் கைவரிசை காட்டிய மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா, சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய வீதி ஊடாக கடவுச் சீட்டு அலுவலகத்திற்கு கடந்த 17 ஆம் திகதி அதிகாலை பெண் ஒருவர் தனது குழந்தையுடன் மோட்டர் சைக்கிளில் சென்ற போது, அந்த வீதியில் முகத்தை மூடித் துணிகளால் கட்டியபடி நின்ற மூன்று இளைஞர்கள் அந்தப் பெண்ணை வழிமறித்து, அவருடைய குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி, அவர் அணிந்திருந்த நகைகளை அபகரித்தமையுடன், பெண்ணின் மோட்டர் சைக்கிளையும் பறித்து சென்றனர்.

இச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார். அந்த முறைப்பாட்டுக்கு அமைய வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஜெயதிலக தலைமையில் பொலிஸ் சார்ஜன்டுகளான திஸாநாயக்கா (37348), திலீப் (6146), திசரட்ட (3419), பொலிஸ் கான்டபிள்களான உபாலி (60945), தயாளன் (91792), இரேசா (11643) ஆகிய பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இவ் விசாரணைகளின் போது குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சிதம்பரபுரம் (35 வயதுடையவர்), மதவுவைத்த குளம் (35 வயதுடையவர்), சிறிராமபுரம் (34வயதுடையவர்) ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 3 இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அபகரிக்கப்பட்ட மூன்று அரைப் பவுண் நகைகள் உருக்கப்பட்ட நிலையில் யாழில் உள்ள நகை கடை ஒன்றில் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.. பறித்துச் செல்லப்பட்ட மோட்டர் சைக்கிள் கனகராயன்குளம் பகுதியில் விற்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இதைவிட இரண்டு பென்ரன் மற்றும் லப்டொப் என்பனவும் இந்த மூவரிடமும் இருந்து மேலதிகமாக மீட்கப்பட்டுள்ளன. இவை கனகராயன்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து திருடப்பட்டவை என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின் இந்த மூவரையும், சான்றுப் பொருள்களுடன் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ஆயிரக்கணக்கான அரச ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை



உள்ளூராட்சி நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ள 8 ஆயிரத்து 400 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர குறிப்பிட்டுள்ளார்.

# வலுசக்தித் துறையை ஒழுங்குபடுத்துவதற்கு சுயாதீன நிறுவனத்தை நிறுவ நடவடிக்கை

## மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ.சானக தகவல்



“வலுசக்தித் துறையை ஒழுங்குபடுத்த சுயாதீன நிறுவன மொன்றை நிறுவத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள் எப்படும். அந்த நிறுவனம், வலுசக்தித் துறையுடன் தொடர்பு டைய இறக்குமதி, தரம், விநியோகம் மற்றும் விற்பனை தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தும்.”

– இவ்வாறு மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ.சானக தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“தொடர்ச்சியான வலுசக்தி விநியோகத்திற்குத் தேவை யான ஸ்திரத்தன்மையை தற்போது ஏற்படுத்த முடிந்துள்ளது. எரிபொருள் வரிசைகளின் காலம் முடிந்துவிட்டது. எமது அமைச்சும் அதனுடன் இணைந்த நிறுவனங்களும் உயர்தர எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும், வலுசக்தித் துறையின் இறக்குமதி, தரம், விநியோ கம் மற்றும் விற்பனை ஆகியவற்றுடன் தொடர்புடைய ஒரு சுயாதீனமான ஒழுங்குமுறை நிறுவனமொன்றின் அவசி யத்தை நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

இந்த சுயாதீன நிறுவனத்தை நிறுவுவதன் நோக்கம், நாட்டில் இறக்குமதி செய்யப்படும் மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல், விமான எரிபொருள், LPG, LNG எரிவாயு மற்றும் மசகு எண்ணெய் ஆகியவற்றின் தரம், விநியோகப் போட்டி மற்றும் விலைகளை ஒழுங்குபடுத்துவதாகும்.

வாடிக்கையாளர்களுக்கு முறையான மற்றும் நியாய மான விலையில் வழங்க இது உதவும் என்பதையும் குறிப் பிட வேண்டும். அதற்கான பிரதான கட்டமைப்பைத் தயாரிப் பதற்குத் தேவையான தகவல்கள் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

மேலும், உலக சந்தை நிலைவரங்கள் மற்றும் எரிபொருள் விலையில் ஏற்படக்கூடிய மாற்றங்களை அறிந்து, அடுத்த 06 மாதங்களுக்குத் தேவையான எரிபொருள் கொள்வனவு செய்வதற்கான கேள்விமனுப் பத்திரம் கோரப்பட்டுள்ளது.

இம்மாதம் 30 ஆம் திகதியும், அடுத்த மாதம் 13 ஆம் திகதியும் மேலும் இரண்டு மாதங்களுக்கு கேள்விப் பத்திரம் கோரப்படவுள்ளன. இதன்படி, 2024ஆம் ஆண்டுக்குத் தேவை யான எரிபொருளின் தவணைகள் நிறைவு செய்யப்படும். இதன் காரணமாக உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்தாலும் எமது விலைகளில் மாற்றம் ஏற்படாது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

மேலும், உலக சந்தையில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் எரிபொருள் விலைகள் குறித்து ஆய்வு செய்ய தற்போது இரண்டு குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அக்குழுக்கள் செய்த ஆய்வுகளால் மில்லியன் டொலர்களை எமக்கு சேமிக்க முடிந்தது.

மேலும், கடந்த காலங்களில், எரிபொருள் இறக்குமதியில் கப் பல்களுக்கு தாமதக் கட்டணம் செலுத்தப்பட்டது. காலதாமத மாக கட்டணம் செலுத்துவது தொடர்பான பல்வேறு செய்தி கள் தினசரி ஊடகங்களில் வெளியாகின. ஆனால், கடந்த ஒன்றரை ஆண்டுகளாக கப்பல்களுக்கு தாமதக் கட்டணம் செலுத்தப்படவில்லை. நாங்கள் சரியான நேரத்தில் பணம் செலுத்தியதே இதற்குக் காரணம்.

தற்போது எரிபொருள் கையிருப்புக்களை ஒரு மாதத்திற்கு பேணி வருகிறோம். ஒரு மாதத்திற்குத் தேவையான எரிபொருள் வாங்குவதற்கு டொலர்கள் கையிருப்பில் பேணப்படுகிறது. அதன்படி, எங்களிடம் இரண்டு மாதங்களுக்கு போதுமான எரிபொருள் மற்றும் டொலர்கள் உள்ளன.” – என்றார்.

# தீர்வு சாத்தியப்படுமா என்ற கேள்வியை விட அதனை சாத்தியப்படுத்துபவர்களாக நாம் இருப்பதே முக்கியம்

## ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன் தெரிவிப்பு

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவளிப்பதனூடாக தமிழ் மக்களுக்கான அரசி யல் உள்ளிட்ட விடயங்களுக்குத் தீர்வுகள் கிடைப்பது சாத்தி யப்படுமா என்பதை விட அதனை சாத்தியப்படுத்த வேண்டியவர் களாக இருப்பதே முக்கியமானது என சுட்டிக்காட்டியுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் அதை சாத்தியப்படுத்துபவராக தங்கள் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இருப்பார் எனவும் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றையதினம் ஊடக சந்திப் பொன்றை மேற்கொண்டிருந்த சிறீரங்கேஸ்வரனிடம் “ஈ.பி.டி.பியின் மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கோட்பாடு ரணிலுக்கு ஆதரவு கொடுப்பதனூடாக சாத்தியமா குமா?” – என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் –

இன்றைய அரசியல் சூழ்நிலையில் நாட்டை வழிநடத்தக் கூடிய சிறந்த தலைமைத்துவம் தேவைப்படுகின்றது.

இதேவேளை சஜித் பிரேமதாஸ வடக்கு, கிழக்கில் 1000 விகாரைகளை கொண்டுவருவேன் எனப் பகிரங்கமாக உரக்கக் கூறியிருந்தவர்.

அதேபோன்று குறைந்த பட்சம் வடகிழக்கு இணைந்த ஓர் அலகாக இருப்பதைக் கூட விரும்பாத அல்லது இருக்கக் கூடாது என நீதிமன்று சென்று வடக்கையும் கிழக்கையும் பிரித்தவர்கள் ஜே.வி.பியினர்.




இந்நிலையில் அதிலிருந்தும் வேறுபட்ட அரசியல் நகர்வைக் கொண்ட தலைவராக ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார். இது அனைத்து கட்சியினருக்கும் நன்கு தெரிந்த விடயம்.

அதேநேரம் இந்தத் தேர்தாலில் போட்டியிடவுள்ளவர்கள் எனத் தெரிவிக்கப்படும் வேட்பாளர்களுக்குள் ரணிலே சிறந்த தெரிவாகவும் உள்ளார்.

இதேநேரம் எமது கட்சி மக்கள் நலன்கள் எதிர்காலம் மற்றும் நாட்டின் நலன்களிலிருந்து சிந்தித்தே தீர்மானங் களை எடுத்துவருகின்றது. அந்த வகையில் தற்போதுள்ள அரசியல் சூழலில்ரணிலின் தெரிவே சாத்தியமானதென்று நாம் ஏற்கனவே வெளிப்படையாக தெரிவித்து வருகின்றோம். – என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# காஸா சிறுவர் நிதிய நன்கொடைகள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன

காஸா மோதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஜனாதிபதியால் ஸ்தாபிக்கப்பட்ட காஸா குழந்தைகள் நிதியத்திற்கான நன்கொடைகள் ஜனாதிபதியிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

கல்முனை ஹுதா ஜும்மா பள்ளிவாசல், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கிண்ணியா கிளை, கல்முனை வலயக் கல்வி அலுவலகம் மற்றும் விளையாட்டு நிறுவனமொன்ற. என்பன காஸா சிறுவர் நிதியத்திற்கு நன்கொடைகளை வழங்கியுள்ளன என ஜனாதிபதி ஊடகப்பிரிவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நன்கொடைகளைக் கையளிப்பதற்கான நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் சரத் குமார ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்

அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்கள் ஒதுக்கிய நிதியில் இருந்து கிடைத்த ஒரு மில்லியன் அமெரிக்க டொலரை, ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் குழு ஊடாக பாலஸ்தீன அரசாங்கத்திடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் கையளித்தார்.


எதிர்வரும் நாள்களில் அந்த நன்கொடை பாலஸ்தீன அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.




# வவுனியா புதிய பஸ் நிலையத்தின் மலசலகூடத்தால் அசௌகரியம்







**(கே.வசந்தன்)**

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் பொதுமக்கள் பாவனைக்காக இருக்கும் இரண்டு தொகுதி மலசலகூடங்களும் சீரான முறையில் இல்லை என்பதுடன் இதில் ஒரு தொகுதி மலசலகூடத்தை பாவனைக்கு அனுமதிக்காமல் தேசியப் போக்குவரத்து அதிகாரசபையினர் பூட்டி வைத்துள்ளனர்.

வவுனியா புதிய பஸ் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்களை கடந்த பின்னரும் இன்றுவரை பஸ் நிலையம் நகரசபையின் கீழ் கொண்டுவரப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பஸ் நிலையத்தின் நிர்வாகக் கட்டமைப்பு தேசிய போக்குவரத்து அதிகாரசபையினரின் (NTC) கட்டுப்பாட்டிற்குள்ளேயே இன்றுவரை உள்ளது.

இது தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளும் இதுவரை எந்த ஒரு குரலையும் எழுப்பவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இந்த மலசலகூடங்கள் சுகாதார சீர்கேடாகக் காணப்படுகின்றமையாலும் நாளுக்கு பல நூற்றுக் கணக்கானோர் ஒரே மலசலகூடத்தை உபயோகிப்பதனாலும் தொற்றுநோய்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை காணப்படுகிறது.

மேலும் மலசலகூடங்களை குத்தகைக்கு வழங்காமல் அதற்கு ஒரு கட்டணத்தையும் தேசிய போக்குவரத்து அதிகார சபையினர் அறவிடுகின்றனர். எனினும் மலசலகூடம் பாவனைக்கு உதவாத நிலையிலேயே காணப்படுகிறது.

இதேவேளை பஸ் நிலையத்திற்கு முன்பாக பொதுமக்கள் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்களை நிறுத்தி விட்டு பஸ்ஸில் பயணிப்பதால் அப்பகுதியில் பல திருட்டு சம்பவங்களும் இடம்பெற்றுவருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.




**உரலார் கேள்வி :- தமிழக ஊடகங்களில் நடைபெறும் விவாதங்களைக் கேட்பீர்களா?**

**உலக்கையார் பதில் :-** கேட்காமல் என்ன? அண்மைக்காலமாக மேற்படி விவாதங்களை நடத்தித்தான் அங்குள்ள ஊடகங்கள் காலந் தள்ளிக் கொண்டிருக்கின்றன. அதுவும் இந்தத் தேர்தல் காலத்தில் அவர்களது காட்டில் நல்ல மழை பெய்கிறது.

வரவர அங்குள்ள ஊடகங்களில் நடக்கும் விவாதங்கள் குழாயடிச் சண்டைகளாய் மாறிக் கொண்டிருக்கின்றன. நிகழ்ச்சியை நடத்தும் தொகுப்பாளருக்குக் கட்டுப்படாமல், ஆளுக்காள் தம் இஷ்டத்திற்குக் கத்துகிற பொழுது எரிச்சல் எரிச்சலாய் வருகிறது.

அங்குள்ள எல்லாக் கட்சிகளும் நிறையக் குறைகளுடன் இருப்பதால், விவாதிகள் ஆளுக்காள் வஞ்சனை இல்லாமல் ஒருவரின் மேல் ஒருவர் சேற்றை அள்ளித் தராளமாக வீசுகிறார்கள். ஒருவர் மற்றக் கட்சிக்காரரில் சாட்டும் குற்றச்சாட்டுகள் அத்தனையும், அவர் கட்சியிலேயே இருப்பது நல்ல வேடிக்கை.

இந்த விவாதங்களுக்கென்று ஒவ்வொரு கட்சியும் சிலபேரைக் குத்தகைக்கு எடுத்து விட்டிருக்குமாப் போல் தெரிகிறது. அப்படி குத்தகைக்கு எடுக்கப்பட்டவர்கள்தான், சமூகத்தில் எது நடந்தாலும் அது பற்றி விவாதிக்கவென ஊடகங்களுக்குள் வந்து குதித்து விடுகின்றனர்.

விவாதிப்போருக்கும் சரி விவாதங்களை நடத்தும் ஊடகங்களுக்கும் சரி, உண்மைச் சமூக அக்கறை இருப்பதாய்த் தெரியவில்லை. விவாதிகள் சமூகத்தில் தம் முகப்பதிவு நோக்கி மட்டுமே விவாதங்கள் செய்கிறார்கள்.

விவாதங்களை நடத்தும் ஊடகங்களுக்கு அவ்விவாதங்கள் தொழில் முதலீடுகள். அவர்களுக்குச் சமூகத்தில் ஏதாவது ஓர் அதிர்வு நடந்து கொண்டே இருக்க வேண்டும். பெரும்பாலும் அவ்வதிர்வு அழிவு சார்ந்ததாய் இருப்பதையே அவர்கள் பெரும்பாலும் விரும்புகிறார்கள்.

பிழை நடக்கிற இடங்களைக் கமராவுடன் சூழ்ந்து கொண்டு இவ்வூடகக்காரர்கள் பண்ணுகிற அட்டூழியம் மிகக் கொடுமையானது. அண்மையில் நடிகர் விஜய் அன்டனியின் மகள் தற்கொலை செய்து கொண்டபோது, அச் சம்பவத்தை வியாபாரமாக்க, ஊடகங்கள் போட்டி போட்டமையைக் காணக் கொலைவெறி வந்தது.

அந்தப் பிள்ளையின் மரணத்தால் குடும்பமே சோகத்தில் இருக்க, அம் மரணத்தில் தமக்குத் தீனியாய் ஏதாவது அழுக்குக் கிடைக்காதா? என வராகங்களாய் (ஊடகக்காரர்களுக்கு மரியாதை கொடுத்து நல்ல தமிழில் சொல்லியிருக்கிறேன்) ஊடகக்காரர்கள் அந்த மரண வீட்டைச் சுற்றிவந்த காட்சியைக் காண 'கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் கெடவே' என மனங் கொந்தளித்தது.

சமூகத்தில் நடக்கும் எந்த விடயம் பற்றியும் இவ்வூடகக்காரருக்கும் 'குத்தகை' விவாதிகளுக்கும் எள்ளளவும் அக்கறை இருப்பதாய்த் தெரியவில்லை. நடந்த சம்பவத்தின் பரபரப்பை வைத்து முடிந்த வரையும் தொழில் செய்கிறார்கள். சமூகத்தில் அடுத்ததொரு அதிர்வுச் சம்பவம் நிகழ்ந்ததும், முன்னைய சம்பவத்தை அப்படியே கைவிட்டுப் புதிய சம்பவத்தை வைத்து வியாபாரம் தொடக்கி விடுகிறார்கள்.

இவ் விவாதங்களில் கலந்து கொள்ளும் விவாதிகள் 'நடிகர்திலகத்தை' வென்ற நடிகர்களாக இருக்கிறார்கள். குறித்த சம்பவத்தைப் பற்றி விவாதிக்கையில் அவர்கள் காட்டும் பரபரப்பும், உணர்ச்சிவயப்பாடும் இவர்களைப்போலச் சமூக ஆர்வலர் எவரேனும் இருப்பார்களா? என்று எண்ண வைக்கிறது. அத்தனையும் பொய்!

மற்றொரு சம்பவம் கிடைத்து அதற்குள் நுழைந்ததும் அங்கும் அதே உணர்ச்சி நடிப்பைத் தொடங்கி விடுகிறார்கள். அவர்களில் ஒருவரேனும் முன்பு விவாதித்த சம்பவம் பற்றிக் குறிப்பிட்டு அதற்கு என்ன முடிவு வந்திருக்கிறது? அது பற்றி விவாதத்தை நீங்கள் ஏன் தொடரவில்லை? என்று நிகழ்ச்சித் தொகுப்பாளரிடம் கேள்வி கேட்பதேயில்லை. வியாபாரிகளுக்கு வியாபாரம் நடந்தால் போதும்தானே?

விற்பனைப் போட்டி என்று வந்துவிட்ட பின்பு அங்கே தர்மம் எப்படி நிலைக்கப் போகிறது? அரசியல்காரர்கள் தாம் பொய்யர்களாய் மாறி விட்டபடியால், பொய்யை விற்கும் இவ் ஊடகக் காரர்களோடு சமரசம் செய்து கொள்கிறார்கள். அது வெளிப்படையாகத் தெரிகிறது. இந்தப் பொய் விற்கும் ஊடகக்காரர்கள் 'ஊடக சுதந்திரம்', 'ஊடக தர்மம்' என்று பேசுகிறபொழுது இரத்தம் கொதிக்கிறது.

அதனால் தான் அண்ணாமலை அவர்கள் ஊடகக்கார்களை வைத்துச் 'சம்பவம் செய்கையில்' நம்மை அறியாமல் மனதுக்குள் மகிழ்ச்சி உண்டாகிறது.

தமிழ்நாட்டு ஊடகங்களில் சத்தியம் செத்துப்போய் பலகாலம் ஆயிற்று என்றே நினைக்கிறேன். ஜனநாயகத்தைத் தாங்கும் நான்கு தூண்களில் ஒன்றாக ஊடகத்தையும் சொல்கிறார்கள். என்றைக்கு ஊடகங்கள் தொழில் ரீதியாய்த் தம்மை மாற்றிக் கொண்டனவோ, அன்றே ஊடக தர்மம் தூக்கிட்டுக் கொண்டு

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி▲

இறந்து போய்விட்டது.

நாடாளுமன்றம், நிறைவேற்றுத்துறை, நீதித்துறை ஆகிய மற்றைய மூன்று தூண்களும் வியாபாரம் ஆக்கப்பட்டால் சமூகத்துள் எந்தளவு தீங்கு விளையுமோ, ஊடகங்களும் தனியே வியாபார நோக்கமாக இயங்குகின்ற பொழுது அதே அளவு தீங்குதான் விளையப் போகிறது. முன் சொன்ன மற்றைய ஜனநாயகத் தூண்களும் கூட வியாபார மயமாக்கப்பட்டுக் கொண்டிருப்பது வேறு விடயம்.

**சல்லடையார் சலிப்பு - தமிழ் நாட்டு ஊடகக்காரர்கள் இதைப் படித்துவ-ிட்டு வாரிதியாரை வைத்துச் 'சம்பவம்' செய்யப் போகிறார்கள்.**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி :-தமிழ்நாட்டுத் தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கும் என்று நினை-க்கீறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** அண்ணாமலையும், சீமானும் என்னதான் தலையால் குத்திக் கிளறினாலும், நிச்சயமாக மீண்டும் தி.மு.கதான் வெற்றிபெறப் போகிறது. இதில் சந்தேகத்துக்கு இடமில்லை என்றே நினைக்கிறேன். ஆனால் ஸ்டாலின் சொல்வதைப் போல 40 க்கு 40 என்ற கணக்கு நிச்சயம் வரப்போவதில்லை.

கழக ஆட்சியைக் குடும்ப ஆட்சியாக மாற்றிக் விதைத்துப் பயன் கண்டு கொண்டிருக்கும் திராவிடர் கழகங்களின் எதிரியாய்த் திடீரென முளைத்தெழுந்து, அண்ணாமலை இத்தனை வளர்ச்சி பெற்றிருப்பது நிச்சயம் ஒரு சாதனை தான்.

ஆனால் அந்த வளர்ச்சி இம்முறை வாக்கின் விகிதாசாரத்தில் வெற்றி காட்டுமே தவிர தி.மு.கவை வீழ்த்துகிற அளவு நிச்சயம் உயரப்போவதில்லை. ஒருவேளை அ.தி.மு.கவின் கூட்டு இருந்திருந்தால் ஓரளவு ஆளும் கட்சிக்குச் சரிசமமாகக் கயிறு இழுத்திருக்க முடியுமோ என்னவோ தெரியவில்லை. ஆனால் அந்த வெற்றியை எதிர்பாராது தனித்துநின்ற அண்ணாமலையின் ஆண்மை ஆச்சரியம் தருகிறது.

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்து நிற்கும் கட்சிகளால் பல காலம் ஆளப்பட்ட காரணத்தால் மக்களுக்கு அண்ணாமலை காட்டும் இறுக்கமான உண்மை முகம் பிடிக்கப்போகிறதா இல்லையா என்பதைத் தேர்தல் முடிவுகள் தான் தெரிவிக்கப் போகின்றன. கோயம்புத்தூரில் பெரும்பாலும் அண்ணாமலை வெற்றிக் கொடி நாட்டுவார் என்றே தோன்றுகின்றது. அந்த விடயத்திலும் சிலர் ஐயம் தெரிவித்தபடிதான் இருக்கின்றார்கள்.

மக்களுக்கு முகப் பரிச்சயமான ஒருசில தலைவர்கள் மட்டுமே இருப்பது இக் கட்சிக்கான பெரிய பலவீனமாகக் கருதப்படுகின்றது.

அடுத்து அ.தி.மு.க.விற்கு வரலாம். கட்சியின் தற்போதைய தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் மாநிலத்தைச் சில காலம் ஆண்டிருந்த போதும், அந்த ஆட்சி அவர் மடியில் தவறு



கொண்டிருப்பது, அ.தி.மு.க. தலைமையின் வலிமை குன்றி இருப்பது, சிறந்த பேச்சாளர்களைக் கட்சி இழந்து நிற்பது, தேவையே இல்லாமல் இவர்கள் காட்டும் இந்துமத எதிர்ப்பு எனப் பல காரணங்கள் தி.மு.கவை 40க்கு 40 எடுக்க விடாமல் தடுக்கும் என்பது நிச்சயமான விடயம்.

தி.மு.கவும் சரி, அ.தி.மு.கவும் சரி எஞ்சினை நிற்பாட்டிய பின்பும் ஓடிக் கொண்டிருக்கும் வாகனத்தைப் போலத்தான் தற்போது இருந்து கொண்டிருக்கின்றன. தத்துவக்காரர்கள் சொல்வது போல முன்னவர் செய்த வினைதான் இப்போது இவர்களது பலமாக இருக்கிறது. இவர்களுக்கான தனித்த பலம் என்று ஒன்று இருப்பதாய்த் தெரியவில்லை.

அடுத்து, தற்போதைக்கு அனைத்துக் கட்சிகளாலும் பிரமிப்புடன் பார்க்கப்படுகின்ற, பா.ஜ.கவைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், இன்றைய நிலையில் சட்டமன்றத்திற்குள் இக் கட்சி பலவீனமாய் இருந்த போதும், வெளியில் தி.மு.கவிற்கு எதிர்க்கட்சியாக இக்கட்சியே திகழ்கிறது என்பதுதான் உண்மை.

கடந்த சில வருடங்களில் அண்ணாமலை தனி மனிதராய் உண்டாக்கியிருக்கும் அதிர்வுகள்தான் இன்றைய பா.ஜ.கவின் முழுப்பலமாய் இருக்கிறது. 50 ஆண்டு காலம் பலராலும் உழுது தலாக விழுந்த வெற்றிக்கனியேயாம். அந்த ஆட்சியமைப்பில் வஞ்சனையும், சூழ்ச்சியும் வகுத்த வட்டத்துள் விதியால் தள்ளப்பட்டு விழுந்த தலைவர் என்பதன்றி அவ்வாட்சி அமைப்பில் அவரது தனிப்பங்களிப்பு ஏதும் இருக்கவில்லை என்பது வெளிப்படையான உண்மை.

அந்த ஆட்சியைப் பிடிக்க அவர் தவழ்ந்து சென்று அன்னையின் தாள்பிடித்த அந்த அருவருப்பான காட்சி ஒன்றே, அவரின் ஆளுமை இன்மைக்கான தக்கசான்றாய் அமைந்து போயிற்று. ஆனாலும் நினைத்ததை விடப் பழனிச்சாமி அவர்களும் கட்சியை ஒன்று படுத்தி ஸ்டாலினுக்குத் துணிவாய் நிமிர்ந்து நெஞ்சைக் காட்டுகின்றார்.

மேடைகளில் தி.மு.க.வை விமர்சிக்கும் அளவிற்கு பா.ஜ.கவை அவர் விமர்சிக்காது இருப்பது, தேர்தல் முடிவுகள் வந்தபிறகு மீண்டும் பா.ஜ.கவுடன் கூட்டு வைக்கும் அவர்களின் நோக்கத்தைக் காட்டுவதாகப் பலரும் சொல்லுகிறார்கள்.

எம்.ஜி.ஆர். ஜெயலலிதா போன்ற வீரியம் மிக்க தலைவர்களால் வழிநடத்தப்பட்ட இக் கட்சியின் தலைவராய் மக்கள் எடப்பாடியாரை ஏற்பார்களா என்பதையும் தேர்தல் முடிவுகள்தான் சொல்லப்போகின்றன. சுருங்கச் சொல்வதா

தொடர்ச்சி▼

**தொடர்ச்சி▲**

னால் இன்றைய நிலையில் இக் கட்சியும் ஓடிய எஞ்சினை நம்பி உருளப் பார்க்கிற வாகனம் தான் என்பதுதான் உண்மை.

ஒரு காலத்தில் தி.மு.க. பேச்சாளர்களினால் தான் வளர்ந்தது. ஆற்றல் மிக்க பேச்சாளர்கள் இருந்ததால் வலிமை மிக்க தலைவர்களை எல்லாம் அக்கட்சி புறமுதுகிடச் செய்தது. இன்று தி.மு.க.விலும் சரி, அ.தி.மு.க.விலும் சரி வலிமை மிக்க பேச்சாளர்கள் இல்லை என்பதுதான் உண்மை. இன்றைய நிலையில் தமிழகத் தலைவர்களுக்குள் பேச்சாற்றல் மிக்க தலைவர் என்றால் சீமானுக்குத்தான் அந்த மகுடத்தைச் சூட்டவேண்டி வரும். அண்ணாமலையார் சத்தியத்தைப் பேச்சாற்றல் ஆக்க முயல்கின்றார். அந்தப் பாணியின் வெற்றி இனித்தான் தெரிய வரப் போகின்றது. ஆனால் சீமான் மிக ஈர்ப்பான ஒரு பேச்சுப்பாணியைத் தனதாக்கி வைத்திருக்கின்றார். அப்பாணியின் வெற்றியை அவரது கூட்டங்களில் கூடும் இளைஞர் கூட்டமே நிரூபணம் செய்கிறது.

எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேராத அவரது முடிவு அவரது முடிவு தனித்துவத்திற்கான அடையாளம் ஆகலாம். ஆனால் அவரது கட்சியின் வளர்ச்சிக்கு உதவுமா? என்பது கேள்விக் குரியதாகத்தான் இருக்கின்றது. அண்ணாமலையாரின் சில தனித்துமான முடிவுகளுக்குப் பின்னால் நாட்டை ஆளும் கட்சியின் பலத்தின் நிழல் இருந்து துணை செய்கிறது, அப்படி ஏதும் இல்லாத நிலையில் சீமானின் தனித்துவ முடிவுகள் தீர்க்க தரிசனம் அற்றவையாகவே கருதப்படுகின்றன.

பெரும்பாலும் அவரது கட்சிக் கூட்ட மேடைகளில் அவர் மட்டுமே 'போக்கஸ்' பண்ணப்படுகின்றார். முகம் தெரிந்த தலைவர்கள் இல்லாத குறைபாட்டில் இவர்களுக்குத்தான் முதலிடம். சீமான் சொல்லும் அரசியல் முடிவுகள் யதார்த்தத்திற்கு வெகு தூரத்தில் இருப்பதாகவே படுகிறது. வலிமை மிக்க பேச்சாளராக இருந்தாலும் ஒரு வாய்ச்சொல் வீரரை நம்பி தமிழ் மக்கள் மாநில ஆட்சியை ஒப்படைப்பார்களா என்பது சந்தேகமே.

தனிமரத் தோப்பொன்று குறித்த சிலருக்கு நிழல் தரலாம், ஓர் பெரிய இனத்திற்கு நிழல் தருமா எனும் கேள்வி சீமானைப் பொறுத்த வரையில் விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது. ஆனாலும் சீமானின் பேச்சின் வீச்சு அவர் கட்சிக்கான வாக்கின் விகிதாசாரத்தைச் சற்றேனும் கூட்டும் என்றேதான் எதிர்பார்க்கப்படுகின்றது. இதுதான் தமிழ்நாடு தேர்தல் களத்தின் யதார்த்த நிலை என்று நினைக்கிறேன். அங்கு யாருக்கு வாக்கு விழப் போகிறதோ என்னவோ? இதை எழுதியதால் எனக்கு நிறையத் தாக்கு விழப் போவது மட்டும் நிச்சயமான உண்மை.

**சல்லடையார் சலிப்பு - காக்க காக்க கதிர்வேல் காக்க!**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி :- என்ன?தமிழரசுக் கட்சியின் தலைமைப் பிரச்சனை அமுங்கிப் போய்க் கிடக்கிறதே!**

**உலக்கையார் பதில் :-** கட்சிக்கு இன்னும் உயிர் இருக்கிறதா என்று பரிசோதித்துக் கொண்டிருக்கிறார்கள் போல.

**சல்லடையார் சலிப்பு - தப்பிதவறி இருந்தால் அதையும் எடுக்கிறதுக்கோ? ஹீ....ஹீ.....ஹீ.....!**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி :- நம் அரசியலுக்குள் தலையிடாதீர்கள் என்று புலம் பெயர்ந்த வர்த்தகர்களை நோக்கிச் சுமந்திரன் கூறி இருக்கும் கருத்துப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**



**உலக்கையார் பதில் :-** அதில் என் கருத்தும் அதுதான் என்று நான் எப்போதோ சொல்லி விட்டேன்.

**சல்லடையார் சலிப்பு - வாரிதியார், சுமந்திரன் இவ்விருவரில் முன் மொழிபவர் யார்? வழிமொழிபவர் யார்?**
**ஹீ....ஹீ.....ஹீ.....**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

# மத்தள விமான நிலைய முகாமைத்துவத்தை இரண்டு நிறுவனங்களுக்கு வழங்க அனுமதி




மத்தள விமான நிலையத்தின் முகாமைத்துவத்தை இரண்டு நிறுவனங்களுக்கு வழங்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இதற்கு ஐந்து நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்திருந்த நிலையில், இந்தியாவின் M/s Shaurya Aeronautics Pvt. Ltd மற்றும் ரஷ்யாவின் Airports of Regions Management Company ஆகிய நிறுவனங்களுக்கு 30 வருடங்களுக்கு மத்தள விமான நிலையத்தினை முகாமைத்துவம் செய்வதற்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மத்தள சர்வதேச விமான நிலையத்தை முகாமைத்துவம் செய்வதற்கான விருப்பத்தைக் கோர கடந்த ஜனவரி மாதம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போலி விசா இணையத்தளம் தொடர்பில் குடிவரவு திணைக்களத்தின் அறிவுறுத்தல்

புதிய விசா முறைமைக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள www.srilankaevisa.lk இணையத்தளத்தினை போன்று போலி இணையத்தளம் ஊடாக சிலர் பணம் செலுத்துகின்றமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.




Online ஊடாக விசாவிற்கு விண்ணப்பிக்கும் போது www.immigration.gov.lk என்ற இணையத்தளத்தின் ந எளைய பகுதியை மாத்திரம் பயன்படுத்துமாறு திணைக்களம் அறிக்கையொன்றின் ஊடாக தெரிவித்துள்ளது. கடந்த 17 ஆம் திகதியில்; இருந்து குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் புதிய விசா முறைமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.




# 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் பொதுஜன பெரமுன சுயாதீன விசாரணை

கட்சியின் ஒழுக்கத்தை மீறி ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாக பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

கட்சியின் ஒழுக்காற்றுக் குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில், விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், கலாநிதி நாலக கொடஹேவா, டிலான் பெரேரா, வசந்த யாப்பா பண்டார, கலாநிதி உபுல் கல்பத்தி, கே.பி.எஸ். குமாரசிறி ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பிலேயே விசாரணை நடத்தவுள்ளதாக பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்களின் நியாயப்படுத்தலை கடிதம் மூலம் கேட்டறிந்ததன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தலைமையிலான பொதுஜன பெரமுனவின் 6 உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கடந்த 5 ஆம் திகதி ஐக்கிய மக்கள் கூட்டணி என்ற பெயரில் உடன்படிக்கை செய்துகொண்டனர்.

# அநுரகுமார திஸாநாயக்க சுவீடனுக்குப் பயணமானார்



தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சுவீடன் சென்றுள்ளார்.

அங்கு நடைபெறவுள்ள மக்கள் சந்திப்பு மற்றும் சிநேகபூர்வ கலந்துரையாடல்களில் பங்கேற்பதற்காக அவர் சென்றுள்ளார்.

நெக் ஓலா மற்றும் ஸ்டொக்ஹோம் நகரங்களில் இந்த சந்திப்புகள் நடைபெறவுள்ளன.

தேசிய மக்கள் சக்தியின் சுவீடனுக்கான வெளிநாட்டுக் குழு இந்தச் சந்திப்புகளை ஏற்பாடு செய்துள்ளது.

# உலப்பனே சுமங்கல தேரர் உள்ளிட்ட ஐவர் நேற்றுப் பிணையில் விடுவிப்பு





ஆசிரியர் – அதிபர் தொழிற்சங்க ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் உலப்பனே சுமங்கல தேரர் உள்ளிட்ட ஐவரையும் பிணையில் விடுவிக்க கொழும்பு புதுக்கடை மேலதிக நீதிவான் பசன் அமரசேன நேற்று உத்தரவிட்டார்.

கொழும்பு நகரசபையின் முன்னாள் உறுப்பினர் சுனந்த லியனபத்திரண, அவரது மனைவி, கொழும்பு நகரசபையின் முன்னாள் உறுப்பினர் தேவிகா மாத்தற ஆரச்சி, சமீர சத்துரங்க மற்றும் புபுது லக்மால் ஆகியோரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்ட ஏனைய தரப்பினர் ஆவர்.

முதலாவது சந்தேகநபரான சமீர சத்துரங்க என்பவருக்கு ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையை விதித்த நீதவான், உலப்பனே சுமங்கல தேரர் உள்ளிட்ட ஏனைய 04 சந்தேகநபர்களுக்கும் 2 லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகள் வீதம் விதித்து உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்ற உத்தரவை மீறி அரச அதிகாரிகளுக்கு இடையூறு விளைவித்தமை, அமைச்சரின் கடிதத்தைக் காட்டி அழுத்தங்களை பிரயோகித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் பேரில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

நாரஹேன்பிட்டி – தாபரே மாவத்தையிலுள்ள பல குடிசை வீடுகளை நீதிமன்ற உத்தரவின் பேரில் அகற்றுவதற்கு முற்பட்டபோது, அதற்கு இடையூறு விளைவித்தனர் என உலப்பனே சுமங்கல தேரர் உள்ளிட்டோர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இதற்கமைய, சந்தேகநபர்கள் சட்டத்தரணிகள் ஊடாக கடந்த 22 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர்.

அன்றைய தினம் விடயங்களை ஆராய்ந்த நீதிவான் சந்தேகநபர்களை இன்று வரை விளக்கமறியலில் வைத்து உத்தரவிட்டார்.

சாட்சியாளர்கள் மீது அழுத்தம் விடுத்தால், பிணை அனுமதி இரத்துச் செய்யப்படும் என நீதிவான் நேற்று எச்சரிக்கை விடுத்தார்.

அத்துடன், வழக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 05ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிவான் உத்தரவிட்டார்.

# 17 சிறார்களைச் சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு கடத்தியவர் கைது

இலங்கைச் சிறார்களை மலேசியா ஊடாக ஐரோப்பாவிற்கு அனுப்பி ஆள் கடத்தலில் ஈடுபட்ட நபர் குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என திணைக்களத்தின் விசாரணை அதிகாரி எம்.ஜி.வி. காரியவசம் தெரிவித்துள்ளார்.

தெஹிவளையை சேர்ந்த 76 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், இலங்கையை சேர்ந்த 17 சிறார்களை சட்டவிரோதமாக நாட்டில் இருந்து வெளியேற்றி ஆட்கடத்தலில் ஈடுபட்டுள்ளார் எனக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

அந்த நபர் தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இளுக்குபிட்டிய அண்மையில் உத்தரவிட்டிருந்தார்.


அதற்கமைய, குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் அதிகாரிகள் மலேசியாவின் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியதுடன், சந்தேகநபர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.





# அமெரிக்க விவசாய துணைச் செயலாளர் ஜனாதிபதி ரணிலுடன் கலந்துரையாடல்

அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் வர்த்தக மற்றும் வெளிநாட்டு விவசாய விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் அலெக்சிஸ் டெய்லர் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.



இதன்போது, அமெரிக்க உதவியுடன் முன்னெடுக்கப்படும் பால் உற்பத்தியை நவீனமயப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

அந்த திட்டத்தின் ஊடாக நாடளாவிய ரீதியில் பால் உற்பத்தியை விரிவுப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசாங்கத்தின் விவசாய நவீனமயமாக்கல் செயற்பாடுகள் குறித்து விளக்கமளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இத்துறையில் இளைஞர்களை அதிகளவில் உள்ளீர்ப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அரசாங்கத்தின் விவசாய நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என அமெரிக்க விவசாய துணைச் செயலாளர் உறுதியளித்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த கலந்துரையாடலில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சர்வதேச அலுவல்கள் தொடர்பான பணிப்பாளர் தினுக் கொலம்பகே உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.



# இன்றைய ராசி பலன்கள் - 27.04.2024




உங்களுக்கு பயன் தரும் வகையிலான சரியான முடிவுகளை இன்று உங்களால் எடுக்க இயலும். இன்று நன்மைகள் நடைபெறும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை ஆர்வத்துடனும் உறுதியுடனும் ஆற்றுவீர்கள். சுய முயற்சி காரணமாக நன்மை அடைவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நிதிகளில் முதலீடு செய்வது இன்று பலனளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத்திற்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது.




இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இயலாத நிலை இருக்கும். இன்று பொறுமை அவசியம். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழலில் சுமூகமான நிலை இருக்காது. சக பணியாளர்களுடனான தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படும்.

இன்று முழுவதும் உங்கள் துணையுடன் அமைதியாக கட்டுப்பாட்டுடன் பழகுங்கள். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கும் வகையில் நாவடக்கம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்குவீர்கள்.




இன்று காணப்படும் சிறிய பிரச்சனைகளை கையாள கடின முயற்சி தேவை.

பணி வளர்ச்சியைப் பொருத்தவரை இன்று உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை காணப்படும். பணியை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் உரையாடும் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். பெரிய முதலீடுகள் முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல்வலி அல்லது செரிமானம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.




இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களை தவிர்க்கலாம். அதனால் பதட்டமின்றி காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் / மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள்.என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்திற்காக செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.04.2024




இன்றைய நாள் ஆக்கமுடைய நாளாக அமையும். சிறிய தொலைவிலான பயணமும் மற்றும் சில மாற்றங்களின் காரணமாக உங்கள் தைரியத்தையும் உறுதியையும் நீங்கள் இழக்க நேரலாம்.

குறித்த நேரத்திற்குள் கொடுக்கப்பட்ட பணியை முடிப்பது சற்று கடினமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் மற்றும் உங்கள் துணையின் இடையே தொடர்பாடலில் இடைவெளி காணப்படும். இது உறவின் சீரமைப்பை கெடுக்கும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வது நல்லது.

நிதிநிலைமை சீராகவோ நல்ல முறையிலோ காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வது இயலாது.




உங்கள் மனதில் சில இலக்குகளை கொண்டிருப்பீர்கள். அவைகளை செயலாற்றுங்கள். அதனை எளிய வழியில் அடையலாம். பயணத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.பணிகளை உற்சாகமாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் சுறுசுறுப்பும் காணப்படும்.




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.உங்கள் நடவடிக்கைகளில் கவனம் தேவை.இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம்.பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனை தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாக இன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

